சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.1219/அ4/2022 நாள். 24.02.2022

பொருள் : அறிவியல் நகரம், சென்னை - 25 - சிறந்த ஆசிரியர் விருது 2020 - 2021 - முன்மொழிதல் - தொடர்பாக

பார்வை 1 அரசாணை எண்.192 உயர்க்கல்வித் (பி2) துறை, நாள்.13.08.2018.

2 சென்னை - 25, காந்தி மண்டபம் சாலை, உயர்கல்வித்துறை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம் கடித எண்.1635/அந/அறிவிப்புகள்/மு.அ.அ.(2)/2022, நாள்.17.02.2022.

மேற்கண்ட அரசாணையின்படி, அறிவியல் நகரம் 2018-19 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு "சிறந்த ஆசிரியர் விருது" - னை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு / அரசு உதவிப் பெறும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் சிறந்த அறிவியல் ஆசிரியர்களை கண்டறியவும், ஊக்கப்படுத்தவும், அதன் ஊடாக மாணாக்கர்களை எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் அறிவியலாளர்களாக உயர்த்துவதற்கும், அறிவியல் நகரம் 2018-19ஆம் ஆண்டு முதல் "சிறந்த ஆசிரியர் விருது"-களை வழங்கி வருகிறது.இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படும் 10 ஆசிரியர்களுக்கு தலா ரூ.25,000/-க்கான காசோலை (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் சான்றிதழ் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதிற்கு கீழ்க்கண்ட ஐந்து பாடப்பிரிவுகள் அறிவியல் நகரத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1. கணிதம்
2. இயற்பியல்
3. வேதியியல்
4. உயிரியல் மற்றும்
5. புவியியல்/கணினி அறிவியல்/வேளாண் நடைமுறைகள்.

இவற்றுள் **ஐந்து விருதுகள் தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் , மேலும் ஐந்து விருதுகள் பொதுப்பிரிவில் ஆங்கிலம் மற்றும் தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும்** பிரித்து வழங்கப்படும். இதற்கான

விண்ணப்பப்படிவம், விண்ணப்பிக்க தொடர்பான விதிகள் ஆகியவைகளை **www.sciencecitychennai.in என்ற அறிவியல் நகர இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சிறந்த மாணவர்களை உருவாக்குவதிலும் செம்மைப்படுத்துவதிலும் ஆசிரியர்களுடைய பணி அளப்பரியது. குறிப்பாக அறிவியல் ஆசிரியர்கள் மாணவர்களிடம் குவிந்து கிடக்கும் அளப்பரிய அறிவியல் ஆற்றலை வெளிக்கொணர்வதிலும் அவர்களை அறிவியலாளர்களாக உயர்த்துவதிலும் குறிப்பிட்ட தகுந்த பங்கினை ஆற்றுகிறார்கள். அத்தகைய ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்புகள் வரை எடுக்கும் ஆசிரியர்களுக்கு "சிறந்த ஆசிரியர் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

2020-21 ஆம் ஆண்டிற்கான "சிறந்த ஆசிரியர் விருது" வழங்க ஏதுவாக மேல் குறிப்பிட்டுள்ள ஐந்து வகைப் பாடப்பிரிவுகளில் (தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி) பாடப்பிரிவுக்கு ஒன்று வீதம் ஒரு கல்வி மாவட்டத்திற்கு (**மொத்தம் பத்து**) பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து மூன்று நகல்கள் பெற்று இவ்வலுவலகத்தில் இரு நகல்கள் 03.03.2022 மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"இது மிகவும் அவசரம்"**

இணைப்பு: 1. பார்வை (2)ல் காண் கடித நகல்

2. விண்ணப்பப் படிவம் மற்றும் விதிமுறைகள்.

24.2

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

24/2/2022

பெறுநர்

**அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர், சென்னை மாவட்டம்.**

**நகல்**

**அரசு/ அரசு உதவி பெறும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும்**

**உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்,**

**சென்னை மாவட்டம்.**

Date 21/02/2022
Time 12.49 PM.

A(4)

# அறிவியல் நகரம்

## உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை – 600 025.

கடித எண். 1635 / அ ந / அறிவிப்புகள் / மு. அ. அ. (2) / 2022 நாள் 17.02.2022

பெறுநர்:

ஆணையர் அவர்கள்
பள்ளிக்கல்வித் துறை
டி. பி. ஐ. வளாகம்
சென்னை – 600 006

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் சென்னை-8
12.19
22 FEB 2022

அய்யா,

பொருள்: அறிவியல் நகரம், சென்னை – 25 – "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020–2021" – முன்மொழிதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை எண். 192 உயர்க்கல்வித் (பி2) துறை, நாள் 13.08.2018

-------

மேற்கண்ட அரசாணையின்படி, அறிவியல் நகரம் 2018–19 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசின் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது"–னை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு / அரசு உதவிப் பெறும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் சிறந்த அறிவியல் ஆசிரியர்களை கண்டறியவும், ஊக்கப்படுத்தவும், அதன் ஊடாக மாணாக்கர்களை எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் அறிவியலாளர்களாக உயர்த்துவதற்கும், அறிவியல் நகரம் 2018–19–ஆம் ஆண்டு முதல் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது"–களை வழங்கி வருகிறது. இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படும் 10 ஆசிரியர்களுக்கு தலா ரூ. 25,000/–க்கான காசோலை (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்விருதிற்கு கீழ்க்கண்ட ஐந்து பாடப்பிரிவுகள் அறிவியல் நகரத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது:

1. கணிதம்
2. இயற்பியல்
3. வேதியியல்
4. உயிரியல் மற்றும்
5. புவியியல் / கணினி அறிவியல் / வேளாண் நடைமுறைகள்

# அறிவியல் நகரம்

## உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை – 600 025.


இவற்றுள் ஐந்து விருதுகள் தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும், மேலும் ஐந்து விருதுகள் பொதுப்பிரிவில் ஆங்கிலம் மற்றும் தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் பிரித்து வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப்படிவம், விண்ணப்பிக்க தொடர்பான விதிகள் ஆகியவைகளை www.sciencecitychennai.in என்ற அறிவியல் நகர இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

சிறந்த மாணவர்களை உருவாக்குவதிலும் – செம்மைப்படுத்துவதிலும் ஆசிரியர்களுடைய பணி அளப்பரியது. குறிப்பாக அறிவியல் ஆசிரியர்கள் மாணவர்களிடம் குவிந்து கிடக்கும் அளப்பரிய அறிவியல் ஆற்றலை வெளிக்கொணர்வதிலும் – அவர்களை அறிவியலாளர்களாக உயர்த்துவதிலும் குறிப்பிட்ட தகுந்த பங்கினை ஆற்றுகிறார்கள். அத்தகைய ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்புகள் வரை எடுக்கும் ஆசிரியர்களுக்கு "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

2020–21–ஆம் ஆண்டிற்கான "சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது" வழங்க ஏதுவாக மேல் குறிப்பிட்டுள்ள ஐந்து வகைப் பாடப்பிரிவுகளில், பாடப்பிரிவுக்கு ஒன்று வீதம் ஒரு மாவட்டத்திற்கு ஐந்து பாடப்பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்ட ஆசிரியர்களின் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தலைமை ஆசிரியர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் ஆணையர், பள்ளிக் கல்வித் துறை அவர்களின் வழியாக அறிவியல் நகரத்திற்கு 07.03.2022 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேரும் வண்ணம் தங்கள் கீழ் பணிபுரியும் அலுவலர்களை அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(ஒ.ம்.) திருமதி. க. லட்சுமி பிரியா, இ. ஆ. ப.,
துணைத்தலைவர் (பொறுப்பு)

17/02/22
முதுநிலை அறிவியல் அலுவலர்

இணைப்பு: விண்ணப்பப்படிவம் மற்றும் விதிமுறைகள்

நகல்: அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அறிவியல் நகரம்
தமிழ்நாடு அரசு
காந்திமண்டபம் சாலை, சென்னை – 600 025
தொலைபேசி: 044–2952 0142 / 43
மின்னஞ்சல்: scicitychennai@gmail.com

---

## சிறந்த அறிவியல்ஆசிரியர் விருது – 2020–2021
## பரிந்துரைக்கப்படும் விண்ணப்பப்படிவம்

பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் கடவுச்சீட்டு அளவு புகைப்படம்

பரிந்துரைக்கப்படும் விண்ணப்பப்படிவம் கீழ்க்கண்ட 5 வகைப் பாடப்பிரிவுகளில் எந்த ஒரு பாடப்பிரிவின் கீழ் அனுப்பப்படுகிறது என்பதனை குறிப்பிடவும்

| வ. எண் | பரிந்துரைக்கப்படும் பாடப்பிரிவு |
|---|---|
| 1 | கணிதம் |
| 2 | இயற்பியல் |
| 3 | வேதியியல் |
| 4 | உயிரியல் |
| 5 | கணினி அறிவியல் / புவியியல் / வேளாண் நடைமுறைகள் |

1. அ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் பெயர்

தமிழில் :

ஆங்கிலத்தில் :

ஆ) பாலினம் :

இ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் பணிநிலை :

(உம்:- பட்டதாரி ஆசிரியர்)

பள்ளியின் முகவரி :

தொலைபேசி எண் :

அலைபேசி எண் :

தொலைநகல் எண் :

மின்னஞ்சல் முகவரி :

ஈ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் இல்ல முகவரி :

தொலைபேசி எண் :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் முகவரி :

2. அ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் பிறப்பு விவரம் :

பிறந்த தேதி / மாதம் / ஆண்டு மற்றும் வயது (மே 31, 2020–ன்படி) :

பிறந்த ஊர் :

வட்டம் :

மாவட்டம் :

மாநிலம்

(தகுந்த பிறப்பு சான்றிதழ் அல்லது 10–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்களின் நகலை **இணைக்கவும்)**

ஆ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் தனது கல்வியினை தமிழ்மொழி வழி பயின்றவர் எனில், பள்ளி வகுப்புகள் மற்றும் பட்டப்படிப்புகளை குறிப்பிட்டு தகுந்த சான்றிதழ்களின் நகலினை இணைக்கவும். (மாற்றுச் சான்றிதழ் அல்லது தாங்கள் படித்த கல்வி நிலையங்களால் வழங்கப்படும் சான்றிதழ்)

3. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் தனது கல்வித் தகுதி விவரத்தினை கால வரிசைப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரப்பவும். (தகுந்த சான்றிதழ்களின் நகலை **இணைக்கவும்)**

| வ. எண் | தேர்ச்சிப் பெற்ற படிப்பு (X, xii,....... ) | படித்த பள்ளியின் பெயர் மற்றும் முறை கல்லூரியின் பெயர் மற்றும் பல்கலைக்கழகம் | தேர்ச்சி பெற்ற ஆண்டு | தகுதிக்காண் பருவத்தினை முடித்த மொழிவழி | பெற்ற சராசரி மதிப்பெண் / தரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

4. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் பணி விவரங்களை கால வரிசைப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிரப்பவும். (தகுந்த சான்றிதழ்களின் நகல்களை இணைக்கவும்)

| வ. எண் | வகித்த மற்றும் வகிக்கும் ஆசிரியர் பொறுப்பு | பணியாற்றிய பள்ளிகளின் முகவரி | காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | | | | |
| | | | | |

5. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர், கடந்த 5 ஆண்டுகளில் (2015 ஜீன் முதல் மே 2020 வரை) பள்ளிக்கு வருகை புரிந்த நாட்களை பள்ளி வருகைப் பதிவேட்டின்படி கீழ்க்கண்டவாறு தெரிவிக்கவும். (விடுப்பு பற்றிய விவரங்களையும் தெரிவிக்கவும்)

| வ. எண் | பணியாற்றிய பள்ளியின் பெயர் | ஆண்டு (ஜீன் முதல் மே வரை) | மொத்த வேலை நாட்கள் | வருகை புரிந்த நாட்கள் | பள்ளிக்கு வருகை புரிந்த நேரம் மற்றும் பள்ளி முடிந்த பின்னர் செல்லும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

6. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரால் பள்ளியில் பாடம் எடுக்கும் வகுப்புகளை (standard) வரிசைப்படுத்தவும் (கடந்த 5 ஆண்டுகளில்)

| வ. எண் | பள்ளியில் எடுத்த / எடுக்கும் வகுப்பு | பள்ளியில் எடுத்த / எடுக்கும் பாடங்கள் | மொழி வழி | தேர்ச்சி விகிதம் (%) | ஆண்டுகள் முதல் – வரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் கையாண்ட பாடத்தில் அவர் சிறப்பாக கவனம் செலுத்திய உட்பிரிவு (உதாரணம்: இயற்பியல் – நிறமாலையியல், வேதியியல் – கரிம வேதியியல், கணிதம் – அல்ஜீப்ரா)

8. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் மாணாக்கர்களுடைய சமூக, பொருளாதார சூழலை அறிந்தவராக மாணாக்கர்களின் எண்ண ஓட்டம், ஆர்வம், ஆற்றல் இந்த அடிப்படையிலான உளவியலைப் புரிந்து கொண்டு எவ்விதம் கற்பித்தல் செய்தார் என்பதனை தெரிவிக்கவும்.

9. கடந்த ஐந்தாண்டுகளில் பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் தான் கையாளுகின்ற அறிவியல் பாடப்பிரிவில் மாணாக்கர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டி, அறிவியல் உண்மைகளை அறிந்திடவும், ஆற்றலை வளர்த்திடவும், அறிவியல் கட்டுரைகள் எழுதுவதற்கும், அறிவியல் வடிவமைப்புகளை உருவாக்குவதற்கும் எவ்வாறு மாணாக்கர்களுக்கு வழிகாட்டினார்? மாணாக்கர்களின் அறிவியல் கள வெற்றிக்கு எத்தகைய பங்களிப்பு செய்தார் என்பது பற்றி 200 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதவும்.

10. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் மாணாக்கர்களை அறிவியலில் புதிய கண்டுபிடிப்பாளர்களாக உருவாக்கி உள்ளாரா? ஆம் எனில் அதனைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கவும் (தகுந்த சான்றுகளை இணைக்கவும்)

11. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் பள்ளி மாணாக்கர்களை அறிவியல் கருத்தரங்குகள் / அறிவியல் சார்ந்த கல்விச் சுற்றுலா / அறிவியல் கண்காட்சிகளுக்கு பங்கெடுக்க அழைத்துச் சென்றிருந்தால் அதன் விவரங்களைத் தெரிவிக்கவும் (தகுந்த சான்றுகளை இணைக்கவும்)

12. அ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியர், அறிவியல் பாடங்களை சிறப்பாக கற்பிக்கவும் – அறிவியல் உண்மைகளை ஆழமாக மாணாக்கர்கள் புரிந்துணர்ந்து கற்றுக்கொள்ள கையாண்ட சிறப்பான உத்திகளை வரிசைப்படுத்தவும்.

1.

2.

3.

4.

ஆ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியரால் கையாண்ட உத்திகளில் சிறப்பானது, தனித்தன்மையானது, எனக் கருதப்படுபவைகள் பற்றி விளக்கவும்.

இ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் மேற்கண்ட உத்திகளை கற்பித்தலில் கையாண்டதன் விளைவாக மாணாக்கர்கள் கற்றலில் அடைந்த பயன்களை வரிசைப்படுத்தவும்.

1.

2.

3.

4.

13. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரால் கடந்த 5 ஆண்டுகளில் பணப்பயன் ஏதுமின்றி பள்ளி நேரத்திற்கு பின்னரும், விடுமுறை நாட்களிலும் மாணாக்கர்களுக்கு பள்ளி வளாகத்திலோ, வேறு இடத்திலோ குறிப்பிட்ட அறிவியல் பாடங்களில் சிறப்பு வகுப்புகள் எடுத்தோ மற்றும் மாதிரி தேர்வுகள் நடத்தியோ இருந்தால் அதன் விவரங்களை தெரிவிக்கவும்.

| வ. எண் | ஆண்டுகள் பள்ளி முகவரியுடன் | எடுக்கப்பட்ட வகுப்புகள் மற்றும் பாடங்கள் | பரிந்துரைக்கப்பட்ட ஆசிரியரால் எடுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|
| | | | சிறப்பு வகுப்புகள் | மாதிரி தேர்வுகள் |
| | | | | |
| | | | | |

14. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் ஏற்கனவே பொதுவாக ஆசிரியர் பணிக்காகவோ / குறிப்பாக தனது தனிப்பட்ட அறிவியல் சாதனைகளுக்காகவோ விருதுகள் பெற்றிருந்தால், அதன் விவரங்களைக் குறிப்பிடவும். (பெற்ற விருதுகளின் சான்றுகளை இணைக்கவும்)

| வ. எண் | பெற்ற விருதுகளின் பெயர் | மாநில / தேசிய / பன்னாட்டு அளவில் | விருது பெற்ற வருடம் | விருதுகளை வழங்கிய அமைப்பின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| | | | | |

15. அ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் பள்ளி மாணாக்கர்களின் நலனுக்காக தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அறிவியல் புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருந்தால் / மொழி பெயர்த்திருந்தால் அதன் விவரங்களைத் தெரிவிக்கவும் (புத்தகங்களை இணைக்கவும். அதோடு அரசு அமைப்புகளோ அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளோ நூல் வெளியிடுவது தொடர்பாக எண்கள் வழங்கியிருந்தால் குறிப்பிடவும்)

ஆ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் அறிவியல் கட்டுரைகள், பருவ இதழ்களில் / செய்தித்தாள்களில் வெளி வந்திருந்தால் அதன் விவரங்களை தெரிவிக்கவும். (தகுந்த சான்றுகளை இணைக்கவும்)

இ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் அறிவியல் கண்டுபிடிப்புகளில் காப்புரிமை பெற்றிருந்தால் அதன் விவரங்களை தெரிவிக்கவும் (தகுந்த சான்றுகளை இணைக்கவும்)

ஈ) பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் தனது பணிக்காலத்தில் கற்பித்தலுக்காக புத்தாக்க பயிற்சியினை பெற்றிருந்தால் அதன் விவரங்களை தெரிவிக்கவும் (தகுந்த சான்றுகளை இணைக்கவும்)

| வ. எண் | புத்தாக்க வகுப்பு நடைபெற்ற இடம் மற்றும் நாள் | பயிற்சியை வழங்கிய அமைப்பு |
|---|---|---|
| | | |
| | | |

பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் கையொப்பம்

**சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது – நோக்கம், தேர்வு செய்யும் முறை மற்றும் பொது நிபந்தனைகள்**

**நோக்கம்:**

தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிப் பெறக்கூடிய பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு நடத்தும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் சிறந்த அறிவியல் ஆசிரியர்களை கண்டறியவும், ஊக்கப்படுத்தவும், மாணாக்கர்களை எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் அறிவியலாளர்களாக உயர்த்துவதற்கும், அறிவியல் நகரம் 2018 ஆம் ஆண்டு முதல் “சிறந்த அறிவியல் விருது”களை வழங்கி சிறப்பு செய்கிறது.

**பரிசு:**

இவ்விருது பெறும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 25,000/–க்கான (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

## விண்ணப்பித்தல் தொடர்பான விதிகள்:

1. அறிவியல் நகரத்தால் பரிந்துரைக்கப்பட்ட பாடப்பிரிவுகளில் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை வகுப்பு எடுக்கும் ஆசிரியர்கள் "சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது 2020"–க்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.

2. ஆசிரியரால் இவ்விருதுக்காக அறிவியல் நகரத்திற்கு நேரடியாக விண்ணப்பிக்க இயலாது.

3. ஆசிரியர்களால் பரிந்துரைக்கப்படும் பாடப்பிரிவுகள், அவர்கள் படித்து பட்டம் பெற்ற துறைகளாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. மாணாக்கர்களை ஆசிரியர் குறிப்பிட்ட அறிவியல் பாடப்பிரிவில் சாதிக்க வைத்த சாதனைகளின் அடிப்படையில் பாடப்பிரிவு பரிந்துரைக்கப்படலாம்.

4. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரால் கொடுக்கப்பட்டுள்ள சாதனைகள் அனைத்தும் 31.05.2020–க்குள் நிறைவு பெற்றவையாக இருக்க வேண்டும். அதற்கு பின்னர் உள்ள சாதனைகளை அறிவியல் நகரம் கருத்திற்கொள்ளாது.

5. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் மூன்று எண்ணிக்கையிலான நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அறிவியல் நகரத்திற்கு அனுப்ப வேண்டும்.

6. அனைத்துப் பக்கங்களிலும் மற்றும் இணைப்புகளிலும் பக்க எண்கள் குறிக்கப்பட்டு பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் தனது கையொப்பத்தினை தமிழில் இட வேண்டும்.

7. நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் உரிய மற்றும் முறையான வழியில் தமிழில் கையொப்பத்துடன் அறிவியல் நகரத்திற்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு பெறப்பாடாத விண்ணப்பப் படிவங்கள் அறிவியல் நகரத்தால் நிராகரிக்கப்படும்.

8. விருதிற்காக அறிவியல் நகரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட புத்தகங்களை / ஆவணங்களை எக்காரணத்தைக் கொண்டும் திரும்ப வழங்க இயலாது.

9. இவ்விருது தேர்வு என்பது விருதுக்குழுவின் தலைவர் மற்றும் துணைத்தலைவர், அறிவியல் நகரம் அவர்களின் இறுதி முடிவிற்கு மட்டுமே உட்பட்டவை.

10. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரால் அனுப்பப்படும் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் முறையான வழியாக 07.03.2022 அன்று மாலை 5.30 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

துணைத்தலைவர்,
அறிவியல் நகரம்,
பிர்லா கோளரங்க வளாகம்,
காந்தி மண்டபம் சாலை,
சென்னை – 25.

துணைத்தலைவர்

**சான்றிதழ்**

**(பரிந்துரைக்கப்படும் பள்ளி ஆசிரியரின் உபயோகத்திற்கு மட்டும்)**

திரு / திருமதி ______________________________ என்கிற நான் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020"–க்காக இவ்விண்ணப்பப் படிவத்தினை நிரப்பியுள்ளேன். இவ்விருதிற்கு விண்ணப்பிக்க கொடுக்கப்பட்டுள்ள விதிகளை முழுமையாக புரிந்துக் கொண்டு, என்னால் இவ்விண்ணப்பப்படிவத்தில் நிரப்பப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள இணைப்புகள் அனைத்தும் உண்மையானவை என்று உறுதி அளிக்கிறேன்.

தேதி:

இடம்:

பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் கையொப்பம் மற்றும் முத்திரை

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

**(பரிந்துரைக்கப்படும் ஆசிரியர் பணிபுரியும் பள்ளியின் அலுவலகம்)**

1. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் பெயர் :

2. வகிக்கும் பணியின் பெயர் மற்றும் துறை :

3. பணியில் வகிக்கும் காலம் : முதல் வரை

4. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரின் பெயரில் விசாரணை / குற்றச்சாட்டுகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் / வழக்குகள் ஏதும் தமிழ்நாடு அரசின் பள்ளி கல்வித் துறையில் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதா ? அல்லது நிலுவையில் உள்ளதா ? ஆம் எனில், அதன் தற்போதைய விவரங்களைத் தெரிவிக்கவும்.

5. பரிந்துரைக்கப்படும் ஆசிரியரால் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020"–க்காக கொடுக்கப்பட்டு இருக்கும் தகவல்கள் (அலுவல் பணிகளுக்கு உட்பட்டு) சரியானவை என்று சான்று அளிக்கப்படுகிறது.

தேதி:

இடம்:

அலுவலக கண்காணிப்பாளரது கையொப்பம் மற்றும் முத்திரை

**சான்றிதழ்**

**(பள்ளி தலைமையாசிரியரின் உபயோகத்திற்கு மட்டும்)**

திரு / திருமதி ______________________________ என்கிற நான் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020"–க்காக அறிவியல் நகரத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு ஆசிரியர் திரு / திருமதி______________________ அவர்களால் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, முழுமையாக கண்டுணர்ந்து, அளிக்கப்பட்டு இருக்கும் தகவல்கள் மற்றும் இணைப்புகள் அனைத்தும் உண்மையானவை என்று அவர் பணிபுரியும் பள்ளியின் தலைமையாசிரியர் என்ற முறையில் சான்று அளிக்கிறேன்.

தேதி:

இடம்:

பள்ளி தலைமையாசிரியரின் கையொப்பம் மற்றும் முத்திரை

## சான்றிதழ்

**(முதன்மை கல்வி அலுவலர் உபயோகத்திற்கு மட்டும்)**

திரு / திருமதி ______________________________ என்கிற நான் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020"–க்காக அறிவியல் நகரத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு ஆசிரியர் திரு / திருமதி ______________________ அவர்களால் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, முழுமையாக கண்டுணர்ந்து, அளிக்கப்பட்டு இருக்கும் தகவல்கள் மற்றும் இணைப்புகள் அனைத்தும் உண்மையானவை என்று அவர் பணிபுரியும் பள்ளியின் தலைமையாசிரியர் அவர்களின் சான்றின்படி, மாவட்டத்தின் கல்வி அலுவலர் என்ற முறையில் சான்று அளிக்கிறேன்.

தேதி:

இடம்:

முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரை

## சான்றிதழ்

**(இயக்குநர், பள்ளி கல்வித்துறை அலுவலர் உபயோகத்திற்கு மட்டும்)**

திரு / திருமதி ______________________________ என்கிற நான் "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2020"–க்காக அறிவியல் நகரத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு ஆசிரியர் திரு / திருமதி ______________________ அவர்களால் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, முழுமையாக கண்டுணர்ந்து, அளிக்கப்பட்டு இருக்கும் தகவல்கள் மற்றும் இணைப்புகள் அனைத்தும் உண்மையானவை என்று அவர் பணிபுரியும் மாவட்டத்தின் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் சான்றின்படி, பள்ளி கல்வித்துறையின் இயக்குநர் என்ற முறையில் சான்று அளிக்கிறேன்.

தேதி:

இடம்:

இயக்குநர், பள்ளி கல்வித்துறை கையொப்பம் மற்றும் முத்திரை